# நிதி முறைகேட்டைக் கையாளுதல்.



## நிதி முறைகேடு என்றால் என்ன?

நிதி முறைகேடானது ஒருவரின் மீது அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் பெறுவதற்காக பணத்தை உபயோகிக்கும் போது ஏற்படுகின்றது. இந்த நிதி முறைகேடு ஒருவரைத் தவறான ஒரு உறவுமுறைக்குள் சிக்க வைக்கலாம். இப்படி சிக்கியவர்கள் இந்த தவறான உறவு முறையில் இருந்து வெளியேறி இருக்க விரும்பினாலும் பாதுகாப்பாக இருப்பதற்கான அவர்களின் ஆற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

## இது எவ்வளவு பொதுவானது?

அவுஸ்திரேலியாவில், 16% விகிதமான பெண்கள் அவர்களுடைய வாழ்நாளில் நிதி முறைகேட்டைச் அனுபவிப்பார்கள்[1], ஆண்களும் கூட இதனால் பாதிக்கப்படலாம்.

நிதி முறைகேடானது சகல சமூகப் பொருளாதார இனத்தைச் சார்ந்தோரையும் மற்றும் பல்லினத்தவரையும் மற்றும் சகல பாலினத்தாரையும் பாதிக்கலாம். மாற்றுத்திறனாளிகள் மற்றவர்களைச் சார்ந்தும் நம்பவும் வேண்டியிருப்பது, நிதி வளங்களை அணுகமுடியாமல் இருப்பது, சமூகப் பாதுகாப்பு உரிமைகளை அணுகுவதில் உள்ள தடைகள், நிதியைக் கையாள்வதில் குறுகிய அனுபவம் போன்ற காரணங்களால் பொருளாதார மற்றும் நிதிச் சுரண்டலுக்கு ஆளாகும் அபாயம் அதிகம் உள்ளது[2].

பொதுவாக நிதி முறைகேட்டைப் பற்றிப் பேசும்போது மக்கள் சங்கடப்படுவதையும் திணறடிக்கப்படுவதையும் சாதாரணமாக உணரலாம்.

முக்கியமாக தெரிந்திருக்க வேண்டியவையாவன நிதி முறைகேட்டின் அறிகுறிகளை அறிதல், உதவி பெறச் செல்ல வேண்டிய இடம், ஆபத்தில் இருக்கக் கூடிய குடும்ப அங்கத்தவர் அல்லது நண்பருக்கு எப்படி உதவி செய்வது என்பனவாகும். இது பாதிக்கப்பட்டவர்கள் மீட்சி பெறுவதற்கும் அவருடைய நிதி ரீதியான சார்பற்றதன்மையை மீளப் பெறுவதற்கும் உதவும்.

### நிதிசார் முறைகேட்டை அடையாளங்காணுதல்

நிதிசார் முறைகேடு இருந்த போதிலும், அதை அடையாளங்காணுவது கடினமானது:

- தாம் நிதிசார்பாக முறைகேடுள்ள உறவில் இருக்கிறோமா என்பதை அறிவது பலருக்கும் சிரமமாக உள்ளது.
- நிதிசார் முறைகேடு நுணுக்கமாக ஆரம்பித்து, காலம் செல்லச்செல்ல அதிகரிக்கக் கூடும்.
- சில கலாச்சாரங்களில், வீட்டு நிதிநிலைகள் அனைத்தும் ஒருவரின் கட்டுப்பாட்டில் இருப்பது ஏற்கத்தக்கதாகக் கருதப்படலாம்.
- சிலநேரங்களில், பணம் குறித்த விடயம் வெளிப்படையாகக் கலந்துரையாடப்படாத ஒரு தனிப்பட்ட விவகாரமாகப் பார்க்கப்படுகிறது.

[1] Kutin, Russell, Reid (2017), Economic Abuse between intimate partners in Australia: prevalence, health status, disability and financial stress, Australian and New Zealand Journal of Public Health

[2] www.commbank.com.au/content/dam/commbank-assets/support/2021-09/unsw-disability-report-4.pdf

அவுஸ்திரேலியாவின் காமன்வெல்த் வங்கி ABN 48 123 123 124 AFSL மற்றும் அவுஸ்திரேலிய கிரெடிட் லைசென்ஸ் 234945.

## நிதி முறைகேட்டின் சில அறிகுறிகள்:

நீங்கள் நிதி முறைகேடுள்ள உறவில் இருக்கிறீர்களா இல்லையா என்று சரியாகத் தெரியவில்லையா? பின்வரும் வினாக்களை உங்களிடமே கேட்டுக்கொள்ளுங்கள்:

உங்களுடைய வாழ்க்கைத்துணைவர் எப்போதாவது உங்களை ஒரு வேலையைப் பெறுவதையோ அல்லது வேலைக்கு செல்வதையோ தடுத்திருக்கிறாரா?

உங்களுடைய சொந்தப் பணத்தைச் செலவு செய்வதையோ நிறுத்துமாறு உங்களுக்கு நெருக்கமானவர்கள் எப்போதாவது நிர்ப்பந்தித்துள்ளார்களா?

குழந்தை பராமரிப்பதற்காக உதவி செய்வதையோ அல்லது குழந்தை பராமரிப்பிற்கான உதவிப் பணத்தைத் தருவதற்கோ உங்கள் வாழ்க்கைத் துணைவர் மறுக்கிறாரா?

குடும்ப வருமானம் எல்லாவற்றையும் எப்படிச் செலவழிக்க வேண்டும் என்பதை உங்களுடைய வாழ்க்கைத்துணைவர் கட்டுப்படுத்துகிறாரா?

உங்களுடைய வாழ்க்கைத்துணைவர் நீங்கள் எதற்காகச் செலவு செய்கிறீர்கள் என்பதைக் கண்காணிக்கிறாரா அல்லது பொருட்கள் வாங்கிய ரசீதுகள் அனைத்தையும் காட்டுமாறு உங்களிடம் கேட்கிறாரா?

பணத்தை எடுப்பதற்கு எப்போதாவது தடைசெய்யப்பட்டீர்களா அல்லது உங்களுக்கு அல்லது உங்களுடைய பிள்ளைகளுக்கான அடிப்படைச் செலவுகளுக்கான பணத்தைத் தருமாறு நீங்கள் கேட்க வேண்டியுள்ளதா?

குடும்ப வருமானத்தில் பங்களிக்க விடாமல் நீங்கள் எப்போதாவது தடுக்கப்பட்டுள்ளீர்களா?

பணம் தருவதற்காக பணிகள் அல்லது ‘உதவிகள்’ செய்யுமாறு உங்களிடம் எப்போதாவது கேட்கப்பட்டுள்ளதா?

உங்களுடைய பெயரில் ஒரு கடன் அல்லது கடனட்டையை எடுக்குமாறு வற்புறுத்தப்பட்டுள்ளீர்களா?

உங்களுடைய வாழ்க்கைத்துணைவர் அவருடைய நிதிநிலைகள் அல்லது குடும்ப நிதிநிலைகளை இரகசியமாக வைத்திருக்கிறாரா?

முக்கியமான நிதி தொடர்பான முடிவுகளை எடுப்பதில் உங்களுடைய அபிப்பிராயம் புறக்கணிக்கப்படுகிறதா?

குடும்ப வியாபாரத்தில் சம்பளம் பெற்றுக்கொள்ளாமல் பணியாற்றுமாறு நீங்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றீர்களா?

## எவ்வாறு உதவி பெறுவது

உங்களுக்கு அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவருக்கு நிதி முறைகேடு ஏற்பட்டால் அல்லது அதைப் பற்றி உறுதியாகத் தெரியாவிட்டால், நீங்கள் தொடர்புகொள்ளக் கூடிய இலவசச் சேவைகள் இருக்கின்றன. அவசரநிலை ஏற்பட்டாலோ அல்லது நீங்கள் பாதுகாப்பாக உணரவில்லை என்றாலோ, எப்போது வேண்டுமானாலும் **000** என்ற எண்ணை அழைக்கவும்.

- முதற்கட்டமாக **1800RESPECT** -ஐ **1800 737 732** என்ற இலக்கத்தில் அழைக்குமாறு சிபாரிசு செய்கிறோம். இது ஒரு இலசவமான இரகசிய சேவை.
  இது காமன்வெல்த் வங்கியின் அங்கம் அல்லாத இலசவ இரகசியச் சேவையாகும்.
- உங்களுக்கு ஒரு உரைபெயர்ப்பாளர் அல்லது மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், நீங்கள் மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவையை (TIS National) **131 450**-இல் அழைத்து, உங்களுக்குத் தேவையான மொழியைக் கூறி, 1800RESPECT-ஐ 1800 737 732 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு அவர்களிடம் கேட்டுக்கொள்ளலாம். TIS National இலவசமாகக் கிடைக்கிறது.
- மாறாக, நீங்கள் **1800RESPECT** -ஐ **1800 737 732** என்ற இலக்கத்தில் அழைத்து, ஓர் உரைபெயர்ப்பாளரைக் கேட்கலாம்.
  ஆலோசகர் ஏற்பாடுகளைச் செய்வார்.
- நடத்தை பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்றால், இலவச இரகசிய உதவிச் சேவை உள்ளது. ஆண்களுக்கான பரிந்துரைச் சேவை **1300 766 491** -ஐ அழைக்கவும் அல்லது **ntv.org.au** என்ற தளத்தில் இணையவழியில் உரையாடலாம்.

கூடுதல் உதவி குறித்து மேலும் அறிய **www.commbank.com.au/support/next-chapter** என்ற வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

மேலதிக விரிவான வழிகாட்டலுக்கு **CommBank** இணையத்தளத்தில் Recognise and Recover Guide என்பதை வாசிக்கவும்.